DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, WALAJAPET VELLORE DISTRICT.

DVC No.1/ 2019

PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரண்யா | ஜாதி | : | |
| க/பெ | : | ஜானகிராமன் | மதம் | : | |
| கிராமம் | : | வாலாஜா | தொழில் | : | |
| தாலுக்கா | : | வாலாஜா | வயது | : | 25/2019 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

தேதி - 30.07.2019

குறுக்கு விசாரணை ம.சா.1

நான் என்னுடைய வீட்டில் குடியிருக்க வேண்டும் என்றும், வாழவேண்டும் என்றும் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேலும் என்னை தொல்லை செய்யாமல் இருப்பதற்காகவும், பாதுகாப்பு வேண்டியும் பரிகாரம் கோரியுள்ளேன். எனக்கு 2.3.2015ல் திருமணம் நடைபெற்றது. திருமணம் ஆகி முதூர் கிராமத்தில் 2 வருடங்களாக குடித்தனம் இருந்தேன். எங்களுக்கு குழந்தை இல்லை. முதூர் கிராமத்தில் எங்களுடன் என்னுடைய மாமியார் உடன் வசித்து வந்தார். 3 முதல் 7 எதிர்மனுதாரர்கள் முதூர் கிராமத்தில் வசிக்கவில்லை என்றால் சரிதான். அரக்கோணத்தில் 8 மாதங்கள் குடித்தனம் இருந்தோம். உளியநல்லூரில் எத்தனை நாட்களாக குடியிருந்தோம் என்றால் அங்கு குடியிருக்கவில்லை. உளியநல்லூரில் 1 வருடம் குடித்தனம் இருந்தோம் என்றால் சரியல்ல. வாலாஜாவில் எத்தனை நாட்கள் குடியிருந்தோம் என்றால் அங்கு குடியிருக்கவில்லை. வாலாஜாவில் 2 வருடங்கள் குடித்தனம் இருந்தோம் என்றால் சரியல்ல. 1 வருடங்களாக, டிசம்பர் 2018 லிருந்து நான் பிரிந்து வாழ்ந்து வருகிறேன். 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வழக்கறிஞர் அறிவிப்போ அல்லது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் 1ம் எதிர்மனுதாரர் எனக்கு கொடுமை செய்ததால் நான் விஷம் அருந்திவிட்டு மருத்துவமனையில் இருந்ததால் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை.

*1ம் எதிர்மனுதாரர் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். 2ம் எதிர்மனுதாராான என்னுடைய மாமியாருடன் எனக்கு ஒத்துபோகவில்லை என்பதால் தான் தனிக்குடித்தனம் வைத்தார்கள் என்றால் சரியல்ல. அப்போதும் கூட 1ம் எதிர்மனுதாராருடன் தனியாக வாழவில்லை என்றால், என்னை வாழவிடவில்லை. என்னை அடித்ததில் மருத்துவமனையில் அட்மிட் ஆகினேன். 1ம் எதிர்மனுதாரர் என்னை அடித்தது சம்மந்தமாக அவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் 1ம் எதிர்மனுதாரர் புகார் கொடுக்க வேண்டாம் என்று என்னுடைய காலில் விழுந்ததால் நான் புகார் கொடுக்கவில்லை. 1ம் எதிர்மனுதாரர் என்னை அடித்தது சம்மந்தமாக காயச்சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் விஷம் அருந்தி மருத்துமனையில் சிகிச்சை பெற்ற சான்றிதழ் தான் தாக்கல் செய்துள்ளேன். 1ம் எதிர்மனுதாரர் எந்த தேதியில், எந்த இடத்தில் என்னை அடித்ததாக என் முதல் விசாரணையிலும், வழக்கிலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள் என்னை அடித்து கையெழுத்து வாங்கியதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள் வெளியூரில் வசித்து வருவதால் அவர்களுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கும் எனக்கும் பிரச்சிணை ஏற்பட்டதால் அவர் ஆர்.கே பேட்டைக்கு சென்று விட்டார் என்றால், 2ம் எதிர்மனுதாரரே பிரச்சிணை செய்து அவரே சென்றுவிட்டார். எதிர்மனுதாரர்கள் பணம் கேட்டார்கள் மற்றும் வரதட்சணை கேட்டது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது மற்றும் பெரியோர்கள் வைத்து பேசினோம். நான் கருவுற்ற காலத்தில் எதிர்மனுதாரர்கள் எனக்கு வளைகாப்பு நடத்தினார்கள் என்றால் அவ்வாறு எதுவும் அவர்கள் செய்யவில்லை. நான் 1ம் எதிர்மனுதாரின் அனுமதி இல்லாமல் கருவை கலைத்து விட்டதால் அதனை 1ம் எதிர்மனுதாரர் கேட்டதால் நான் விஷம் அருந்தி விட்டேன் என்றால் எனக்கு 2016ல் ஆண்டில் கரு கலைந்து விட்டது, நான் விஷம் அருந்தியது 2017ம் ஆண்டு, எனவே இதற்கும் அதற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது. நான் 1ம்எதிர்மனுதாரருடன் திருமணம் செய்த பின்பு 1 மாதம் கூட சட்டபடியான மனைவியாக என்னுடைய கடமையை நான் ஆற்றாததால் இந்த மனு செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் கல்யாணம் ஆனத்திலிருந்து வாலாஜாவில் என்னுடைய தாய்மாமா வீட்டில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.*